முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

**62 T I**

තෙවන වාර විභාගය 2023(2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023(2024)
Third Term Examination 2023(2024)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civics Education I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය
மேலதிக வாசிப்பு நேரம்
Additional Reading time

මිනිත්තු යි 10
10 நிமிடம்
10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## குடியியற் கல்வி I

**கவனிக்க :**
1. **எல்லா வினாக்கருக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

1. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளில் ஒன்று.
   1. தற்கால அரசின் நிலப்பரப்பு விசாலமானதாக இருத்தல்.
   2. சமூக தேவைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை காணப்படாதிருத்தல்.
   3. அரசுகளின் சனத்தொகை வரையறுக்கப்பட்டிருத்தல்.
   4. எல்லா பிரசைகளையும் ஒன்று திரட்ட முடிதல்.

2. அரச இறைமையின் கீழ் அடங்காத அதிகாரம்.
   1. நிர்வாக அதிகாரம்  2. அடிப்படை உரிமை  3. மக்கள் ஒற்றுமை  4. வாக்கெடுப்பு

3. அரசின் அடிப்படை மூலக் கூறுகளில் ஒன்று.
   1. சட்டத்துறை  2. நிறைவேற்றுத்துறை
   3. நீதிமன்றம்  4. அரசாங்கம்

4. ஒல்லாந்து, போர்த்துக்கள் ஆகிய நாடுகள் பலம் வாய்ந்த நாடுகளாக உருவாகக் காரணம் அல்லாதது.
   1. மரபினைப் பின்பற்றுதல்  2. தேசிய ஒற்றுமை
   3. வளர்ச்சியடைந்த பொருளாதாரம்  4. போர் மற்றும் படைப்பலம்

5. ஐக்கிய அமெரிக்காவில் பிரதேச அரசு அழைக்கப்படுவது.
   1. கெண்டன்  2. மாநிலம்  3. நகரசபை  4. மாகாணஅரசு

6. ஒற்றையாட்சி நிலவும் நாடுகளுக்கு உதாரணமாக கூறக்கூடியது.
   1. இந்தியா  2. அமெரிக்கா  3. இலங்கை  4. சுவிஸ்லாந்து

7. இலங்கையில் சுதந்திரத்தின் பின் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய கருத்து முன்னெடுக்கப்பட்ட ஆண்டு.
   1. 1973 ஏற்படுத்தப்பட்ட அரசியல் அதிகார முறை மூலம்.
   2. 1983ம் ஆண்டு கிராமோதய சபை மூலம்.
   3. 1987ல் மாகாண சபை மூலம்.
   4. 1965 – டட்லி – செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம்.

8. பன்மை பண்பாடு சமூகம் அதிகமாக கொண்ட நாட்டுக்கு உதாரணம்.
 1. சீனா 2. இந்தியா 3. கியுபா 4. நேபாளம்

9. முதலாளித்துவபொருளாதார முறையொன்றின் அடிப்படை பண்புகளில் ஒன்று.
 1. சொத்துக்களின் உரிமை அரசிடம் காணப்படல்.
 2. மத்திய திட்டமிடல் சபைமூலமாக பொருளாதாரம் நிர்வகிக்கப்படல்.
 3. அடிப்படை பொருளாதார பிரச்சினை தீர்க்கும் போது பொது நோக்கில் செயற்படல்.
 4. வருமானங்கள் சமமற்ற அடிப்படையில் பிரிந்து செல்லுதல்.

10. மோதலை தீர்க்கும் மரபுவழிச் செயற்பாடு ஆவது.
 1. காப்பாற்றும்முறை 2. இணக்கப்பாடு 3. தீர்ப்புக்கூறல் 4. ஆலோசனை

11. பொருளாதாரமல்லாத பண்டம் சில நேரம் பொருளாதார பண்டமாக மாறுகின்றது. அதற்கு உதாரணமாக.
 1. போத்தலில் அடைக்கப்பட்ட நீர் 2. டின்களில் அடைக்கப்பட்ட மீன்
 3. பக்கட் பண்ணிய சீனி 4. வைத்தியசாலை மருந்துகள்

12. விவசாய உற்பத்தியாக கருதக்கூடியது.
 1. தயாரிக்கப்பட்ட உணவுகள் 2. ஆடைகள்
 3. தளபாடப் பொருட்கள் 4. எழுது கருவிகள்

13. 2012 ம் ஆண்டு இலங்கையில் சனத்தொகை கணக்கெடுப்பின் படி இஸ்லாம் மதத்தை பின்பற்றும் மக்களின் சதவீதம்.
 1. 0.1% 2. 7.4% 3. 9.4% 4. 70.2%

14. உலக மயமாதலை எதிர்கொள்ளும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் உருவானது. அதன் நோக்கங்களில் ஒன்று.
 1. அங்கத்துவ நாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல்.
 2. அங்கத்துவ நாடுகள் சமநிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
 3. பிராந்திய ரீதியான பொருளாதாரம் வளர்ச்சியடைதல்.
 4. பிராந்திய ரீதியான ஒத்துழைப்புகளை பெறல்.

15. மோதலை குறைப்பதற்கு பிரசை ஒருவர் மனதில் அமைதியை ஏற்படுத்த செய்யக் கூடிய வழி,
 1. விளையாட்டுக்களில் ஈடுபடல்.
 2. கடமைகளைச் சரியாக செய்தல்.
 3. உளவியல் பயிற்சிகளில் ஈடுபடுதல்.
 4. கண்ணீர் விட்டு அழுதல்.

16. எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருப்பின் அது ஒற்றையாட்சி ஆகும் எனக் கூறிய அறிஞர்.
 1. ஹேர்மன் J பைனர் 2. பிளேட்டோ
 3. அரிஸ்டோட்டில் 4. பேராசிரிர் கானர்

17. 'நகர பிதா' பிரதானியாகக் கொண்டு இயங்கும் நிறுவனம்.
 1. மாநகரசபை 2. நகரசபை 3. மாகாணசபை 4. பிரதேசசபை

18. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலின் பண்புகளாவது.
 1. வாக்காளர் கட்டுப்பாட்டுடன் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தல்.
 2. ஆட்சியாளருக்கு தேவையான நேரத்தில் தேர்தல் நடத்தல்.
 3. சரியான காலத்தில் தேர்தல் வைத்தல்.
 4. அபேட்சகர்களுக்கு மாத்திரம் வாக்கு அதிகாரம் வழங்கப்படல்.

19. சட்டத்துறையின் கடமைகளில் ஒன்று.
1. சட்டத்தை அமுல்படுத்தல்.
2. நிதி நிர்வாகத்தை மேம்படச் செய்தல்.
3. நீதித்துறையை வழி நடத்துதல்.
4. மக்களின் உரிமைகளை பாதுகாத்தல்.

20. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசிடம் காணப்படும் அதிகாரம் ஆவது.
1. நிதி விடயம்
2. கல்வி
3. உள்ளூராட்சி
4. சுகாதாரம்

21. மனித சமூகத்தின் பண்பாடு என்பது.
1. மனிதன் வாழ்கின்ற நிலைக்கேற்ப பண்பாடு வேறுபடல்.
2. சமூகத்தில் பலதரப்பட் சடங்குசம்பிரதாயங்கள், மொழி, மதம், மரபுவழி காணப்படல்.
3. பலதரப்பட்ட மக்கள் ஒன்றாக வாழுதல்.
4. மத நம்பிக்கை மரபுகள் பின்பற்றுதல்.

22. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது அதிகாரம் பரவலாக்கப்பட்ட முயற்சிக்கு உதாரணம் கூறக் கூடியது.
1. மாவட்ட அபிவிருத்தி சபை உருவாக்கம்.
2. பிரதேச சபை நடைமுறைப்படுத்தல்.
3. கிராம சபை அறிமுகம்.
4. உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டம் அறிமுகம்.

23. ஒரு தார்மீக கடமையாக கருதக்கூடியது.
1. அரசுக்கு வரி செலுத்துதல்
2. சட்டத்தை அமுல்படுத்த உதவுதல்.
3. சமூக பழக்கவழக்கங்களை பின்பற்றுதல்
4. சட்டத்துக்கு அடிபணிதல்

24. முதலீட்டுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு.
1. வட்டி
2. ஊதியம்
3. இலாபம்
4. வாடகை

25. 1977ம் ஆண்டுக்கு பிறகு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதா முறையை அழைப்பது.
1. கலப்பு பொருளாதார கொள்கை
2. அடைத்த பொருளாதார கொள்கை
3. திறந்த பொருளாதாரக் கொள்கை
4. சோஷலிச பொருளாதாரக் கொள்கை

26. சனநாயகப் பிரசை ஒருவரிடம் காணப்படக்கூடிய பண்பு.
1. பெரும்பான்மை கருத்தை ஏற்காதிருத்தல்
2. எதிர் கருத்துகளை கேட்டல்.
3. சிறுபான்மை கருத்தை மட்டும் ஏற்றல்.
4. அபிவிருத்தி வேலையை விமர்சித்தல்.

27. சனநாயக சமூகத்தில்சமாதானமிக்க சமுதாயமொன்று கட்டியெழுப்புதல் என்பது,
1. சிறுபான்மையின் கருத்துக்களை மதித்தல்.
2. மக்களுக்கு சுமூகமான கருத்துக்களை வெளியிட முடியாமல் இருத்தல்
3. தமது கருத்துக்களை வலுக்கட்டாயமாக செயற்படுத்தல்.
4. நீதித்துறை சுதந்திரமாக செயற்படுதல்.

28. நிலைமாறும் பொருளாதாரத்தின் பண்பு அல்லாதது.
1. தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்
2. தனியார் சொத்துரிமைக்கு இடம் அளிக்கப்படல்.
3. பொருளாதாரம் தளர்வானதாக காணப்படல்.
4. அரச துறை பொருளாதாரத்தை கண்காணித்தல்.

29. நிலையான அபிவிருத்தியின் போது கவனத்தில் கொள்ளக்கூடிய காரணியாவது.
1. இயற்கை வளங்களை அழித்தல்.
2. எல்லா தேவைகளையும் நிறைவு செய்தல்.
3. எதிர்கால சந்ததியினரிடம் முரண்படல்.
4. சுற்றாடலை பாதுகாத்து பராமரித்தல்.

30. மோதலை தீர்க்கும் போது நடுநிலையாரிடம் காணப்படக் கூடிய பண்பு.
1. பக்கச்சார்பற்றவராயிருத்தல்.
2. நேர்மையான தீர்ப்பை பலவந்தமாக சுமத்தல்.
3. அர்ப்பணிப்புடன் பக்கச்சார்பானவராக இருத்தல்.
4. நேர்மையாக பக்கச் சார்புள்ளவராக இருத்தல்.

31. நல்லாட்சி என்பது.
1. மனிதர்களது தனிப்பட்ட வாழ்க்கை முறைப்பற்றி தீர்வு காணும் செயன்முறையகும்.
2. அரச கொள்கை தீர்மானம் அதனை செயற்படுத்தும் செயன்முறையாகும்.
3. பிரஜையின் ஆன்மீக வாழ்க்கை முறைபற்றி தீர்மானம் காணும் செயன்முறையாகும்.
4. நிர்வாகிகளின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றும் செயன்முறையாகும்.

32. மோதலை தீர்க்கும் போது காப்பாற்றும் முறை பயன்படுத்தப்படுவது.
1. குடும்ப பிரச்சினைக்கு
2. அயலவர் பிரச்சினைக்கு
3. நிதி தொடர்பான பிரச்சினைக்கு
4. இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு பிரச்சினைக்கு

33. உலகமயமாதலில் காணக்கூடிய விசேட பண்புகள் அல்லாதது.
1. வேலையுலகு விரிவுபடல்.
2. குறைந்த ஊதியத்துக்கு தொழிலாளர்கள் பெற முடிதல்.
3. சென்மதி நிலுவை சாதகமாக காணப்படுதல்.
4. தேசிய மனித வள அபிவிருத்தி காணப்படல்.

34. இலங்கையில் வாழும் இனக் குழுவினராக கூறக்கூடியது.
1. இஸ்லாம் 2. இந்து 3. இந்திய தமிழர் 4. கத்தோலிக்கம்

35. ஜனநாயக ஆட்சியுள்ள நாட்டில் அரசியல் யாப்புக்கேற்ப செயற்படுவதால் ஏற்படும் நன்மைகளில் ஒன்று.
1. நீதிமன்றம் சுயாதீனமற்றது.
2. சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் கிடைத்தல்.
3. ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக செயற்படல்.
4. மனித உரிமை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படல்.

36. இரு கட்சிமுறை காணப்படும் நாட்டுக்கு உதாரணம்.
1. இலங்கை 2. வடகொரியா 3. இந்தியா 4. அமெரிக்கா

37. மோதல் உருவாக அடிப்படைக் காரணம்.
1. சமய கருத்துக்கள்.
2. வேறுபட்ட கருத்துக்கள்.
3. ஏனையோரின் கருத்துக்களை செவிமடுக்காமை
4. பொறுமையின்மை.

38. மோதல் வகை இரண்டாகும். அதில் ஒன்று உள்ளக மேதல் மற்றைய மோதலாவது.
1. சர்வதேச மோதல் 2. யுத்த மோதல்
3. கொள்ளை மோதல் 4. பொருளாதார மோதல்

கீழே தரப்பட்டுள்ள விடயங்களை கவனித்து 39, 40 வினாக்களுக்கு விடை தருக.
A – மாகாண சபை பிரகடனத்தை அனுமதித்தல்.
B – மாகாண சபை வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்.
C – மாகாண அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்து நடைமுறைபடுத்தல்.
D – மாகாண சபையை கூட்டுதல், கலைத்தல்.
E – ஆளநருக்கு ஆலோசனை வழங்குதல்.
F – மாகாண சபையில் உரையாற்றுதல், செய்தி அனுப்புதல்.

39. மாகாண ஆளுநருக்குள்ள அதிகாரம் அடங்கிய விடைத் தொகுதி.
1. ABC 2. ACE 3. ADF 4. BCE

40. மாகாண சபை முதலமைச்சருக்கும், அமைச்சருக்கும் உள்ள அதிகாரம் அடங்கிய விடைத்தொகுதி.
1. ABC 2. ACE 3. ADF 4. BCE

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

62 | T | II

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023(2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023(2024)<br>Third Term Examination 2023(2024) | පුරවැසි අධ්‍යාපනය I, II<br>குடியியற் கல்வி I, II<br>Civics Education I, II | 10 වන ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 |

## குடியியற் கல்வி II

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிந்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிந்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. i. ‘சனநாயகம்’ பற்றி வரைவிலக்கணம் வழங்கிய இரு அறிஞர்களை குறிப்பிடுக.
ii. உலக நாடுகளில் காணப்படும் கட்சி முறைகளில் இரண்டைக் குறிப்பிடுக.
iii. அதிகாரத்தின பல வகைகளில் 2 வகைகளைக் குறிப்பிடுக.
iv. சுவிஸ்சலாந்து மத்திய அரசாங்கத்திடம் காணப்படும் அதிகாரங்கள் 2 ஐ தருக.
v. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின அடிப்படை பண்புகள் 2 ஐ குறிப்பிடுக.
vi. இலங்கையில் பண்பாட்டு சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் 2 குறிப்பிடுக.
vii. மனித இருத்தலுக்கு தேவையான அடிப்படைத் தேவைகள் 2 தருக.
viii. மனிதர்களது தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்ற பயன்படுத்தும் பொருட்களும், சேவைகளும் 2 ம் எவை?
ix. ஜொதான் கல்டுன் என்பவரின் மோதல் முக்கோணியில் அடங்கும் கூறுகள் 2 தருக.
x. நுண்ணியமான மோதலுக்கு இரு உதாரணங்கள் எழுதுக.

(10x2=20 புள்ளிகள்)

02. உலகின் பிரபல்யமான ஆட்சிமுறையாக சனநாயக ஆட்சியினை குறிப்பிடலாம்.
i. ஏதென்ஸ் நகராட்சியில் நிர்வாகத்தில் பங்கு கொள்ள முடியாத தரப்பினர்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
ii. தேசிய அரசின் தோற்றத்திற்கான காரணிகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
iii. a) சனநாயக ஆட்சிமுறை வெற்றிபெற அவசியமான காரணிகள் 3 தருக. (3 புள்ளிகள்)
b) அதில் ஒன்றை தெளிவுபடுத்துக. (2 புள்ளிகள்)

03. மனதளவில் சமதானத்தை உருவாக்குவதன் மூலம் மோதல் நிலைமையைக் குறைக்க, நீக்க முடியும்.
i. மனதில் அமைதியை ஏற்படுத்த செய்ய வேண்டிய வழிமுறைகள் 2தருக. (2 புள்ளிகள்)
ii. மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
iii. a) மோதலை சமதானமாக தீர்த்து வைப்பதால் ஏற்படும் நன்மைகள் 3 தருக. (3 புள்ளிகள்)
b) அதில் ஒன்றை விளக்கி எழுதுக. (2 புள்ளிகள்)

(6) WWW.PastPapers.WiKi (5)



Download Term Test Papers, Short Notes From One Place!

04. மனிதர்கள் சமூகமாக இணைந்து வாழ்க்கையை மேற்கொள்ளும் போது பல்வேறு தேவைகளும் விருப்பங்களும் உருவாகின்றன.

i. இலங்கையில் காணப்படும் சந்தைப் பொருளாதார முறையின் பண்புகள் 2 தருக.(2 புள்ளிகள்)

ii. 1948 முதல் 1960 காலப்பகுதியில் இலங்கை பொருளாதாரத்தில் காணப்பட்ட சிறப்பியல்புகள் மூன்றினைத் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. a) உலகமயமாதல் இலங்கை மீது ஏற்படுத்திய பாதகமான தாக்கங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

b) அதில் ஒன்றை தெளிவுபடுத்தி எழுதுக. (2 புள்ளிகள்)

05. பல வேறுபாடுகளைக் கொண்ட சமூக முறை சமூக விஞ்ஞானிகளால் பன்மைத்துவ சமூகம் எனப்படுகின்றது.

i. பண்பாடு என்பதற்கு வரைவிலக்கணம் வழங்கிய இருவரை பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii. a) பன்மை பண்பாட்ச் சமூக மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் 3 எழுதுக. (3 புள்ளிகள்)

b) அதில் ஒன்றை விளக்கி எழுதுக. (2 புள்ளிகள்)

06. உலகில் அரசுகளின் அதிகாரங்கள் யாப்புச்சட்ட மூலம் குறிப்பிட்டு காட்டப்படும்.

i. சமத்துவ அரசு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. ஒற்றையாட்சி முறையின் நன்மைகள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii. a) அரசியல் யாப்பின் 13ம் சீர்த்திருத்தத்தின் படி மூன்று நிரல்களிலும் அடங்கும் விடயங்கள் யாவை? (3 புள்ளிகள்)

b) அதில் ஒன்றைப் பற்றி விளக்குக? (2 புள்ளிகள்)

07. உற்பத்தியின் போது எத்தனை பொருட்கள் உற்பத்தி செய்வது என்பது கிடைக்கப் பெறும் வளங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

i. உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தக் கூடிய நுட்பங்கள் இரண்டும் எவை? (2 புள்ளிகள்)

ii. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அவை பயன்படுத்துகின்ற விதத்துக்கேற்ப மூன்று பிரிவாக பிரிக்கலாம். அம்மூன்றையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. a) பொருளாதார முறையினுள் இடம்பெறும் செயற்பாடுகள் மூன்றினைத் தருக. (3 புள்ளிகள்)

b) அதில் ஒன்றை விளக்குக. (2 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(6) WWW.PastPapers.WiKi (6)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න